OS.No. :10/2023

நாள் : 10.12.2024

பி.வா.சா. :2

பெயர் :இளங்கோவன்

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சி குறுக்கு விசாரணைக்கு ஆஜர். வாதி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார். எனவே குறுக்கு விசாரணை இல்லை.

2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை மனுவின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

10/12/24

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

10/12/24

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா. | 4 | நாள் :10.12.2024 | |
| அசல் வழக்கு எண். | 10/2023 | | |
| பெயர் | மலர்விழி | த/பெ | ராஜேந்திரன் |
| வயது | 56 | தொழில் | — |
| ஜாதி | | மதம் | இந்து |
| கிராமம் | எரவாஞ்சேரி | தாலூக்கா | குடவாசல் |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு மீண்டும் முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் 4 ம் பிரதிவாதி தரப்பு 2 வது சாட்சி ஆவேன். நான் 3/318, மணவாளநல்லூர் மெயின்ரோடு எரவாஞ்சேரி, குடவாசல் தாலுக்கா, திருவாரூர் என்ற விலாசத்தில் வசித்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல சம்மன் வந்தது. 4 ம் பிரதிவாதி இளங்கோ என் தம்பி. என் தாயார் ஜனகம் யாருக்கு உயில் எழுதி வைத்தார் என்றால் என் தம்பி இளங்கோவிற்கு எழுதி வைத்தார். என்னிடம் காட்டப்படும் Ex. B1 பதிவு ஆவணமான உயிலில் கண்ட போட்டோ யாருடையது என்றால் என் தாயாருடையது. உயிலில் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள ரேகை யாருடையது என்றால் என் அம்மாவுடையது. அந்த உயிலில் கண்ட முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. இரண்டாவது சாட்சி கையெழுத்து என் தங்கை பூங்கோதையுடையது. அந்த உயில் எந்த சொத்தை யாருக்கு கொடுத்துள்ளார்கள் என்றால் 70 குழி நிலத்தை என் தம்பி இளங்கோவிற்கு என் தாயார் உயில் எழுதி வைத்திருக்கிறார்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

அந்த உயில் பத்திரத்தில் என் தாயார் கைரேகை வைத்ததை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த உயில் பத்திரத்தில் என் தாயாரின் புகைப்படம் ஒட்டப்பட்டுள்ளது என்றாலும் ஆதார் நகல் இணைக்கப்பட்டுள்ளது என்றாலும் சரி. உயில் பத்திரத்தில் சாட்சி கையெழுத்துபோட்ட என்னுடைய ஆதார் அட்டை ஜெராக்ஸ் மற்றும் மற்றொரு சாட்சியான என் தங்கை பூங்கோதை என்பவரின் ஆதார்

R. Malar

ஜெராக்ஸ் இணைக்கப்பட்டுள்ளது என்றாலும் என்னுடைய ஆதார் ஜெராக்ஸில் என்னுடைய கையெழுத்தும் பூங்கோதையின் ஆதார் ஜெராக்ஸில் அவருடைய கையெழுத்தும் உள்ளது என்றால் சரி. உயில் பத்திரம் தயார் செய்தது வழக்கறிஞர் மற்றும் நோட்டரி பப்ளிக் S. ராஜதுரை என்றால் சரி. அவர் முன்னிலையிலும் நான் மற்றும் பூங்கோதை முன்னிலையிலும் என் அம்மா அந்த உயில் பத்திரத்தில் கைரேகை வைத்தார் என்றால் சரி. உயில் பத்திரத்தை எழுதிவைக்கும்போது என் தாயார் நல்ல மனநிலையில் முழு சம்மதத்துடன் எழுதி வைத்தார் என்றால் சரி.

2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை மனுவின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்து சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

10/12/24

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

10/12/24

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா. | 5 | நாள் :10.12.2024 | |
| அசல் வழக்கு எண். | 10/2023 | | |
| பெயர் | பூங்கோதை | த/பெ | செல்லப்பா |
| வயது | 41 | தொழில் | — |
| ஜாதி | | மதம் | இந்து |
| கிராமம் | சுரைக்காயூர் | தாலூக்கா | குடவாசல் |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு மீண்டும் முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் 4 ம் பிரதிவாதி தரப்பு 3 வது சாட்சி ஆவேன். நான் 2/22, மேலத்தெரு, சுரைக்காயூர், குடவாசல் தாலுக்கா, திருவாரூர் என்ற விலாசத்தில் வசித்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல சம்மன் வந்தது. அதனால் சாட்சியமளிக்க வந்துள்ளேன். 4 ம் பிரதிவாதி இளங்கோ என் அண்ணன். என் தாயார் ஜனகம் யாருக்கு உயில் எழுதி வைத்தார் என்றால் என் அண்ணன் இளங்கோவிற்கு எழுதி வைத்தார். என்னிடம் காட்டப்படும் Ex. B1 பதிவு ஆவணமான உயிலில் கண்ட போட்டோ யாருடையது என்றால் என் தாயாருடையது. உயிலில் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள ரேகை யார் வைத்தது என்றால் என் அம்மா வைத்தார். அந்த உயிலில் கண்ட இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது. முதல் சாட்சி கையெழுத்து என் அக்கா மலர்விழியுடையது. அந்த உயில் எந்த சொத்தை யாருக்கு என் அம்மா எழுதி வைத்தார் என்றால் 70 குழி நிலத்தை என் அண்ணன் இளங்கோவிற்கு என் தாயார் உயில் எழுதி வைத்தார்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

அந்த உயில் பத்திரத்தில் என் தாயார் ஜனகம் கைரேகை வைத்ததை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். நானும் என் அக்கா மலர்விழியும் சாட்சி கையெழுத்தை போட்டதை என் அம்மா பார்த்தார். அந்த உயில் பத்திரத்தில் என் தாயாரின் புகைப்படம் ஒட்டப்பட்டுள்ளது என்றாலும் அதன்மீதும் என் தாயார் கைரேகை வைத்துள்ளார் என்றால் சரி. என்

+ S. Poonsolai

அம்மாவின் ஆதார் நகல் இணைக்கப்பட்டுள்ளது என்றாலும் சரி. அந்த புகைப்படத்தில் ராஜதுரை வழக்கறிஞர் நோட்டரி பப்ளிக் attest செய்துள்ளார் என்றால் சரி. உயில் பத்திரத்தில் சாட்சி கையெழுத்துபோட்ட என்னுடைய ஆதார் அட்டை ஜெராக்ஸ் மற்றும் மற்றொரு சாட்சியான என் அக்கா மலர்விழி என்பவரின் ஆதார் ஜெராக்ஸ் இணைக்கப்பட்டுள்ளது என்றாலும் என்னுடைய ஆதார் ஜெராக்ஸில் என்னுடைய கையெழுத்தும் மலர்விழியின் ஆதார் ஜெராக்ஸில் அவருடைய கையெழுத்தும் உள்ளது என்றால் சரி. என் அம்மாவின் ஆதார் நகல் உயில் பத்திரத்தில் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரி. உயில் பத்திரம் தயார் செய்தது வழக்கறிஞர் மற்றும் நோட்டரி பப்பளிக் S. ராஜதுரை என்றால் சரி. அவர் முன்னிலையிலும் என்னுடைய மற்றும் என் அக்கா மலர்விழி முன்னிலையிலும் என் அம்மா அந்த உயில் பத்திரத்தில் கைரேகை வைத்தார் என்றால் சரி. உயில் பத்திரத்தை எழுதிவைக்கும்போது என் தாயார் நல்ல மனநிலையில் முழு சம்மதத்துடன் எழுதி வைத்தார் என்றால் சரி.

2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை மனுவின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

S. Poongothi

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

10/12/24

மாவட்ட நீதிபதி.
மயிலாடுதுறை

10/12/24